# வீட்டு வசதி வாரியம் கையகப்படுத்திய நில விவகாரம்! பொதுமக்களுக்கு தமிழ்நாடு அரசு வேண்டுகோள்!

## வீட்டு வசதித் துறை அமைச்சர் சு.முத்துசாமி பேட்டி!

சென்னை, பிப். 15-

வீட்டு வசதி வாரியத்தால் கையகப்படுத்தப்பட்ட நிலங்கள் தொடர்பாக வாரியம் உரிய நடவடிக்கைகளை எடுத்து வருவதால் வசிப்பவர்கள் யாரும் பயப்பட வேண்டாம் என்றும், யாரையும் அணுக வேண்டாம் என்றும் வீட்டுவசதித் துறை அமைச்சர் சு.முத்துசாமி தெரிவித்தார்.



இதுகுறித்து, தலைமைச் செயலகத்தில் அவர் செய்தியாளர்களுக்கு புதன்கிழமையன்று அளித்த பேட்டி வருமாறு:-

வீட்டுவசதி வாரியம் சார்பில் 40 ஆண்டுகளுக்கு முன்பு இடங்கள் எடுக்கப்பட்டு, ஆரம்பக் கட்டப் பணியாக, அதற்கான நோட்டீஸ் மட்டும் வழங்கப்பட்டுள்ளது. அதன்பின் எந்த நடவடிக்கையும் அதில் எடுக்கப்படவில்லை. இது குறித்த மனுக்கள் வந்த போது. பொதுமக்களுக்கு ஏற்பட்டுள்ள சிரமங்களை சரிசெய்ய முதல்வர்

மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டார். அதேநேரம் வீட்டுவசதி வாரியத்துக்கும் பாதிப்பு ஏற்படக் கூடாது எனவும் அறிவுறுத்தினார். எனவே, இந்தமாதிரியான பிரச்சினை உள்ள இடங்களை கண்டறிய வாரியம் சார்பில் 16 இடங்களில் புகார் பெட்டிகளை வைத்தோம்.

### அச்சப்படவேண்டாம்!

அந்த கோரிக்கைகளை பிரித்து பார்த்த போது. வாரியமே நடவடிக்கை எடுப்பது பொருத்தமாக இருக்காது என்பதால், கமிட்டி அமைத்து. பரிந்துரை பெற்று நடவடிக்கை எடுக்கலாம் என முடிவெடுக்கப்பட்டது.

அதன்படி, 2 ஓய்வு பெற்ற ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் நியமிக்கப்பட்டு அவர்கள் பணிகளைத் தொடங்கியுள்ளனர். ஏப்ரல் இறுதிக்குள் அவர்கள் தங்கள் பரிந்துரையை வழங்குவார்கள். அதன்பின், வாரியம் நடவடிக்கை எடுக்கும். வீட்டு வசதி வாரியத்தால் எடுக்கப்பட்ட நிலங்கள் தொடர்பாக வாரியம் உரிய நடவடிக்கைகளை எடுத்து வருவதால் வசிப்பவர்கள் யாரும் அச்சப்பட வேண்டாம். யாரையும் அணுக வேண்டாம் என்று அமைச்சர் சு.முத்துசாமி கூறினார்.



புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி சென்டெனியல் லயன்ஸ் கிளப், மதுரை அரவிந்த் கண் மருத்துவமனை மற்றும் மாவட்ட பார்வை இழப்பு தடுப்புச் சங்கம் முன்னெடுப்பில் ஆலங்குடி புனித அற்புத மாதா நடுநிலைப் பள்ளியில் நடைபெறும் இலவச கண் சிகிச்சை முகாமை பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் தொடங்கி வைத்தார்.

# திருவாரூரில் 'மக்களுடன் முதல்வர்' மூன்றாம் கட்ட முகாம்!

## அமைச்சர் கோவி.செழியன்- பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ.பங்கேற்பு!

திருவாரூர், பிப்.15 -

திருவாரூர் மாவட்டத்தில், ஊரகப் பகுதிகளுக்கான மூன்றாம் கட்ட மக்களுடன் முதல்வர் முகாம் திட்ட துவக்க விழா உயர்க்கல்வித் துறை அமைச்சர் முனைவர். கோவி.செழியன் தலைமையில் நடைபெற்றது. மாவட்டச்செயலாளர் பூண்டி.கே. கலை வாணன் எம்.எல்.ஏ, தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக்கழக தலைவர், முன்னாள் அமைச்சர் உ.மதிவாணன், மாவட்ட ஆட்சியர் மோகனச்சந்திரன், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் கருண்கரட், ஆகியோர் முன்னிலை ஏற்றனர்.

உயர்க்கல்வித்துறை அமைச்சர் கோவி.செழியன் தெரிவித்ததாவது,

தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்களின் ஆணைகிணங்க, தமிழகத்தினை தலைசிறந்த மாநிலமாக உருவாக்குவதில் அல்லும், பகலும் அயராது பணியாற்றிக் கொண்டிருக்கும் இளம்தலைவர் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலோடு, மண்ணின் மைந்தர், ஆருயிர் தலைவர் இன்றும் தமிழனத்தினை காக்கின்ற ஒப்பற்ற பெருமைமிக்க தலைவர் கலைஞர் அவர்களின் மண்ணில், திருவாரூர் மாவட்டத்தில், ஊரகப் பகுதிகளுக்கான மூன்றாம் கட்ட மக்களுடன் முதல்வர் திட்ட முகாம் சிறப்பாக நடைபெறுகிறது.

அரசின் நலத்திட்டங்களை ஒவ்வொருவர் வீட்டின் கதவை தட்டி தரும் ஒரே அரசு திராவிட மாடல் அரசு தான். தமிழ்நாட்டில் கடந்த காலங்களில் பல்வேறு திட்டங்களை பெறுவதற்காக பொதுமக்கள் கலெக்டர், ஆர்டிஓ, தாசில்தார், பிடிஓ ஆகிய அலுவலகங்களை தேடிச் சென்ற நிலை இருந்தது ஆனால் தற்பொழுது மக்களின் நேரத்தினை குறைக்கும் வகையிலும், அனைத்து தரப்பு மக்களும் பயன்பெறும் வகையில் மக்களை தேடி நீங்கள் செல்லுங்கள் என தமிழ்நாடு முதல்வர் அவர்கள் ஆணையிட்டு கொண்டு வந்த அற்புதமான திட்டம் தான் 'மக்களுடன் முதல்வர்' திட்டம்.

மேலும், இம்முகாம்களில் மின்சார வாரியம், வருவாய் துறை, ஊரக வளர்ச்சித் துறை, கூட்டுறவுத் துறை, தமிழ்நாடு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, காவல்துறை, மாற்றுத் திறனாளிகள் நலத்துறை, சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை, சுகாதாரத் துறை, வேளாண்மைத்துறை, கால்நடை பராமரிப்புத்துறை, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, மாவட்ட தொழில் மையம், தொழிலாளர் நலத்துறை ஆகிய 15 துறைகளைச் சேர்ந்த 44 சேவைகளை பொதுமக்களுக்கு விரைவாக வழங்கிடும் பொருட்டு இத்திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.

தற்போது ஆதிதிராவிடர் சமுதாயத்தினரின் பெயருக்கு பின்னால் பல்வேறு பட்டங்கள் வருகிறது என்றால் அன்று அம்பேத்கர் வகுத்து தந்த சட்டப் பாதுகாப்பும், பெரியாரின் சமூக புரட்சியும், அதை வழி நடத்தி சென்ற முன்னாள் முதல்வர் கலைஞரும் தான் என்பதனை மறந்து விடக்கூடாது. இன்று சமதர்ம ஆட்சி செய்து இந்தியாவில் முதலிடத்தில் தமிழகத்தை வைத்துள்ள அரசு தமிழக அரசு. அரசின் நலத்திட்டங்களை ஒவ்வொருவர் வீட்டின் கதவை தட்டி தரும் ஒரே அரசு திராவிட மாடல் அரசு தான்; என உயர்க்கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் தெரிவித்தார்.

மேலும், திருவாரூர் மாவட்டத்தில், திருவாரூர் வட்டம், கூடூர் கிராம பஞ்சாயத்திற்கான முகாம் கூடூர் முத்து வள்ளி திருமண மண்டபத்திலும், மன்னார்குடி வட்டம், வடபாதிமங்கலம் கிராம பஞ்சாயத்திற்கான முகாம் வடபாதிமங்கலம் சாதனா திருமண மஹாலிலும், பழையனூர் கிராம பஞ்சாயத்திற்கான முகாம் சாத்தனூர் மீனாட்சி அம்மன் திருமண மண்டபத்திலும், மஞ்சனவாடி திருராமேஸ்வரம் கிராம பஞ்சாயத்திற்கான முகாம் திருராமேஸ்வரம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி என அனைத்து இடங்களிலும் நடைபெற்ற மக்களுடன் முதல்வர் முகாமினை உயர்க்கல்வித்துறை அமைச்சர் முனைவர்.கோவி.செழியன் நேரில் பார்வையிட்டார்.

திருவாரூர் மாவட்டத்தில் நடைபெற்ற மக்களுடன் முதல்வர் திட்ட முகாம்களில் 4 மணி வரை 1655 மனுக்கள் வரப்பெற்றது. அதனைத்தொடர்ந்து, மாற்றுத் திறனாளிகள் நலத்துறையின் சார்பில், கூடூர் முத்துவள்ளி திருமண மண்டபத்தில் நடைபெற்ற மக்களுடன் முதல்வர் முகாமில், இணைப்பு சக்கரம் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர் தலா ரூ.101800 மதிப்பீட்டில் 46 நபர்களுக்கு ரூ.46,82,800% மதிப்பிலும் மற்றும் நலவாரிய கல்வி உதவித்தொகை 5 நபர்களுக்கு ரூ.11,000 ஆக மொத்தம் 51 நபர்களுக்கு ரூ.46 லட்சத்து 93 ஆயிரத்து 800 மதிப்பிலான நலத்திட்ட உதவிகளையும், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறையின் சார்பில் பயனாளி ஒருவருக்கு தமிழ்நாடு முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீடு அட்டையினையும், கர்ப்பிணி தாய்மார்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகத்தினையும், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறையின் சார்பில் 5 பயனாளி களுக்கு மானியவிலையில் பழச்செடிகள் தொகுப்பினையும், வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறையின் சார்பில் உளுந்து 20 கிலோ, நெல் நுண்ணூட்டம், பருத்தி நுண்ணூட்டம், சிங்சல்பேட் 10 கிலோ, அசாடிராக்டின் 0.03 சதவீதம் 1 லி உள்ளிட்ட நலத்திட்ட உதவிகள் 5 பயனாளிகளுக்கும், சப்போட்டா கன்று, கொய்யா கன்று 2 பயனாளிகளுக்கும், வருவாய்த்துறையின் சார்பில் 5 நபர்களுக்கு பட்டா மாற்றுதலுக்கான ஆணையினையும், 13 நபர்களுக்கு புதிய மின்னணு குடும்ப அட்டையும், சமூக பாதுகாப்புத்திட்டத்தின் சார்பில் 3 நபர்களுக்கு உதவித் தொகைக்கான ஆணையினையும் உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர்.கோவி. செழியன் வழங்கினார்.

### பர்கூர் தொகுதிக்குட்பட்ட ஊராட்சிகள்

# 'மக்களுடன் முதல்வர்' 3ஆம் கட்ட திட்ட முகாம்கள்!

## அமைச்சர் சி.வெ.கணேசன் துவக்கி வைத்தார்! தே.மதியரசன் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

கிருஷ்ணகிரி, பிப். 15-

பர்கூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட குட்டூர், பட்லப்பள்ளி, சிகரலப்பள்ளி, பெலவர்த்தி மற்றும் ஜெகதேவி ஆகிய ஊராட்சிகளில், "மக்களுடன் முதல்வர்" மூன்றாம் கட்ட திட்ட முகாம்களை தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர் சி.வி.கணேசன் துவக்கி வைத்து, 961 பயனாளிகளுக்கு ரூ.2 கோடியே 56 இலட்சத்து 48 ஆயிரத்து 468 மதிப்பில் நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

கிருஷ்ணகிரி மாவட்டம், பர்கூர் ஊராட்சி ஒன்றியம், குட்டூர், பட்லப் பள்ளி, சிகரலப்பள்ளி, பெலவர்த்தி மற்றும் ஜெகதேவி ஆகிய ஊராட்சிகளில், "மக்களுடன் முதல்வர்" மூன்றாம் கட்ட திட்ட முகாம்களை அமைச்சர் சி.வி.கணேசன், மாவட்ட ஆட்சித்தலைவர் ச.தினேஷ் குமார், கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளர் பர்கூர் சட்டமன்ற உறுப்பினர் தே.மதியழகன் ஆகியோர் முன்னிலையில் துவக்கி வைத்து, துறை வாரியாக அரங்குகள் அமைத்து பொதுமக்களிடம் மனுக்களை பெற்று கணினியில் பதிவேற்றம் செய்யும் பணிகளை பார்வையிட்டார்.

தொடர்ந்து, அமைச்சர் சி.வெ.கணேசன், ஆம்பள்ளி கிராமத்தில் 194 பயனாளிகளுக்கு ரூ.49 இலட்சத்து 70 ஆயிரத்து 414 மதிப்பிலும், தீர்த்தகிரிப்பட்டி கிராமத்தில் 146 பயனாளிகளுக்கு ரூ.36 இலட்சத்து 84 ஆயிரத்து 219 மதிப்பிலும், சக்கிலிநத்தம் கிராமத்தில் 203 பயனாளிகளுக்கு ரூ.44 இலட்சத்து 57 ஆயிரத்து 459 மதிப்பிலும், வள்ளுவர்புரம் கிராமத்தில் 144 பயனாளிகளுக்கு ரூ.35 இலட்சத்து 90 ஆயிரத்து 618 மதிப்பிலும், ஜெகதேவி கிராமத்தில் 274 பயனாளிகளுக்கு ரூ.89 இலட்சத்து 45 ஆயிரத்து 758 6T60T மொத்தம் 961 பயனாளிகளுக்கு ரூ.2 கோடியே 56 இலட்சத்து 48 ஆயிரத்து 468 மதிப்பில் இயற்கை மரண உதவித்தொகை, பட்டா, வருமான சான்று, சாதி சான்ற, சிறு விவசாயி சான்று, ஓய்வூதியத் தொகை, கல்வி உதவித்தொகை, இணைப்பு சக்கரம் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர், திறன் பேசி, வேளாண்மை தளவாட பொருட்கள், பவர் வீடர், சுயதொழிலுக்கான கடனுதவி உள்ளிட்ட பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

# தஞ்சாவூர் தெற்கு மாவட்டக் கழக பொறுப்பாளர் நியமனம்!

## தலைமைக் கழக அறிவிப்பு!

**தஞ்சாவூர் தெற்கு மாவட்டக் கழகச் செயலாளராக பணியாற்றி வரும் க.அண்ணாதுரை எம்.எல்.ஏ., அவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்குப் பதிலாக திரு. பழனிவேல் (38ஏ, தாமரைக் குடிகாடு, ஆலடிக்குமுலை, பட்டுக்கோட்டை, தஞ்சாவூர்.) அவர்கள் தஞ்சாவூர் தெற்கு மாவட்டக் கழகப் பொறுப்பாளராக நியமிக்கப்படுகிறார்.**

**ஏற்கெனவே தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்ட நிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றிட வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.**

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 13-02-2025

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.

# நீலகிரி மாவட்டக் கழக பொறுப்பாளர் நியமனம்!

## தலைமைக் கழக அறிவிப்பு!

**நீலகிரி மாவட்டக் கழகச் செயலாளராக பணியாற்றி வரும் பா.மு.முபாரக் அவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்குப் பதிலாக திரு.கே.எம்.ராஜு (நெடுகுளா அஞ்சல், கோத்தகிரி, நீலகிரி மாவட்டம்) அவர்கள் நீலகிரி மாவட்டக் கழகப் பொறுப்பாளராக நியமிக்கப்படுகிறார்.**

**ஏற்கெனவே தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்ட நிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றிட வேண்டுமென கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.**


"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 13-02-2025

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## கயல் தினகரன்

பிப்ரவரி 15 (2024)



திராவிட இயக்க கருத்தியலோடு கழகத்தில் தன்னை முழுமையாக ஈடுபடுத்தி கொண்ட தொடக்க கால உறுப்பினர்.

30 ஆண்டுகளுக்கும் மேலாக கழக மாநில இலக்கிய அணி பொருளாளர் பொறுப்பு வகித்தவர்.

1964ஆம் ஆண்டு கழக நாளேடான 'முரசொலி'யின் துணை ஆசிரியராக பணியாற்றியதோடு, முரசொலி உருவாக்கிய எண்ணற்ற எழுத்தாளர்களில் இவரும் ஒருவர்.

மிசா காலத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் கருத்துகளை, அவர் ஆசிரியராக இருந்த தமிழ்முரசு பத்திரிகையில் வெளியிட்டவர்.

சென்னை நூலக ஆணையக்குழு தலைவராக பொறுப்பு வகித்தவர்.

2001ஆம் ஆண்டு நடைபெற்ற முப்பெரும் விழாவில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருக்கரத்தால் "கலைஞர் விருது" பெற்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

# ஒழுங்கு நடவடிக்கை ரத்து!

## தலைமைக் கழக அறிவிப்பு!

திருச்சி மத்திய மாவட்டத்தைச் சேர்ந்த காஜாமலை விஜய், தி.முத்துசெல்வம், எஸ்.துரைராஜ், பெ.ராமதாஸ் ஆகியோர், தங்களது செயலுக்கு வருத்தம் தெரிவித்து மீண்டும் கழகப் பணியாற்றிட அனுமதி அளிக்குமாறு, கழகத் தலைவர் அவர்களிடம் வைத்த கோரிக்கையினை ஏற்று, அவர்கள் மீதான ஒழுங்கு நடவடிக்கை ரத்து செய்யப்பட்டு, இன்று முதல் கழக உறுப்பினராகச் செயல்பட அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 13.02.2025

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## த.வேணுகோபால்

பிப்ரவரி 15 (2024)



தந்தை பெரியாரின் கொள்கைகளால் ஈர்க்கப்பட்டு, திராவிட இயக்கத்தில் தன்னை இணைத்துக் கொண்டு பணியாற்றத் தொடங்கியவர்.

திருவண்ணாமலை மாவட்டக் கழக அவைத் தலைவராக முப்பதாண்டு காலம் பொறுப்பேற்று பணியாற்றியவர்.

ஊராட்சி மன்ற தலைவராக – ஒன்றிய பெருந்தலைவராக – இரண்டு முறை தண்டராம்பட்டு தொகுதி சட்டமன்ற உறுப்பினராக – நான்கு முறை திருப்பத்தூர் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினராக – 2009ஆம் ஆண்டு திருவண்ணாமலை தொகுதி நாடாளுமன்ற உறுப்பினராக என 60 ஆண்டுகளுக்கும் மேலாகப் பொதுவாழ்வில் ஈடுபட்டு மக்கள் பணியாற்றியவர்.

கழகம் அறிவித்த இந்தி எதிர்ப்பு உள்ளிட்ட அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

2019ஆம் ஆண்டு திருவண்ணாமலையில் நடைபெற்ற முப்பெரும் விழாவில் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், "பெரியார் விருது" வழங்கி சிறப்பித்தார்.

தலைமைக் கழகம்
தி.மு.க.